டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 9.10.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 093 | Madurai | Online Edition

# நாட்டில் காற்றாலை எரிசக்தி திறன் வலுப் பெற்றுள்ளது

## மத்திய அமைச்சர் பிரஹலாத் ஜோஷி தகவல்




புது தில்லி, அக்.8

காற்றாலை எரிசக்தி இந்தியா 2026 - வது மாநாட்டின் 8-வது பதிப்பை மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி 2026 அக்டோபர் 8 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார். இந்த மாநாடு அக்டோபர் 7 முதல் 9-ம் தேதி வரை நடை பெறுகிறது. இந்நிகழ்ச்சியில் தமிழக எரிசக்தி துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார், மத்திய மற்றும் பல்வேறு மாநில அரசுகளின் உயர் அதிகாரிகள், காற்றாலை எரிசக்தி சங்க பிரதிநிதிகள், தொழில்துறை தலைவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் பிரஹலாத் ஜோஷி நாட்டின் எரிசக்தி துறையில் பெரும் வாய்ப்புகள் உள்ளதாக சுட்டிக்காட்டினார். 2026-ம் நிதியாண்டில், இதுவரை இல்லாத அளவில் ஆண்டிற்கு 6.05 ஜிகா வாட் அளவிற்கு நிறுவப் பட்டதன் மூலம் நாட்டில் எரிசக்தி துறை வளர்ச்சியடைந்து வருவதாக தெரிவித்தார். 2027-ம் நிதியாண்டில் காற்றாலை எரிசக்தி நிறுவல் திறனைக் கடக்க முடியும் என்று தாங்கள் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

இந்த தொடர்ச்சியான வளர்ச்சி 2030-ம் ஆண்டிற்குள் 100 ஜிகா வாட் அளவிற்கு நிறுவல் திறனை எட்ட வேண்டும் என்ற நமது தேசிய இலக்கை அடைவதற்கான அடித்தளத்தை வலுப் படுத்தும் என்று அவர் கூறினார்.

2026 செப்டம்பர் 30 வரை 59.20 ஜிகா வாட் அளவிற்கு காற்றாலை எரிசக்தி திறன் நிறுவப்பட்டதன் மூலம் 2030-ம் ஆண்டுக்குள் 100 ஜிகா வாட் திறனைக் கடப்பதற்கானப் பயணத்தில் நாடு வலுவுடன் சென்று கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். இது காற்றாலை எரிசக்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் உலகளாவிய தலைமைத்துவத்திற்கான வலுவான அடித்தளம் என்று பிரகஹலாத் ஜோஷி கூறினார்.

பின்னர் பேசிய தமிழக எரிசக்தி துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார், காற்றாலை எரிசக்தி மேம்பாட்டில் மாநிலத்தின் முக்கிய பங்களிப்பு குறித்தும் புதிய முன்முயற்சி களை ஊக்குவிக்க மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

இம்மாநாட்டில் 20-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 400 கண்காட்சியாளர்களும் 500 பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கறவை மாடுகளுக்கு தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி

கடலூர், அக்.8



கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் மற்றும் குமாராட் சிவட்டார, வேளாண்மை துறை சார்பாக 07.10.26 அன்று குமராட்சி வட்டாரம், பரி வளாகம் கிராமத்தில் அறுவடைக்கு பின்சார்ந்த தொழில்நுட்பம், மதிப்பு கூட்டுதல் மற்றும் கறவை மாடுகளுக்கு தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் கால்நடை வளர்ப்பு மூலம் பொருளாதார நிலைத்தன்மையை அடைவது குறித்தும் விளக்கினார். குமாராட்சி வட்டார, வேளாண்மை உதவி இயக்குநர் தமிழ்வேல், இப்பயிற்சியை தலைமை தாங்கி அறுவடைக்கு பின்சார்ந்த தொழில்நுட்பம் மற்றும் மதிப்புகூட்டுதலின் அவசியத்தை எடுத்துரைத்தார். இப்பயிற்சியை விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி, முனைவர் கோ.சத்திய நாரயணன், கலந்துக் கொண்டு நெல் மற்றும் பயறுவகைகளில் அறுவடைக்கு பின்சார்ந்த தொழில் நுட்பம், மதிப்பு கூட்டுதல் வழிமுறைகள், கறவை மாடுகளுக்கு தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும், இப்பயிற்சியில், அறுவடைக்கு பின்சார்ந்த தொழில்நுட்பங்களுக்கு தேவையான இயந்திரங்கள், நிதியுதவி ஆதாரங்கள், பல்வேறு வகையான கால்நடை இனங்கள், அவற்றின் சிறப்பம்சங்கள் மற்றும் கால்நடைத் தீவனமாக அதன் பயன்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இப் பயிற்சியில் அத்மா திட்ட வேளாண்மை அலுவலர், கல்பனா, தானிய லட்சுமி, எட்வின் ஆகியோர், இப்பயிற்சியில் கலந்துக் கொண்டனர். இறுதியாக வேளாண்மை அலுவலர் நடராஜன், நன்றியுரை வழங் கினார். இப்பயிற்சியில் குமாராட்சி கிராமத்தை சேர்ந்த 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உழவர் திரள் பெருவிழா!



சேலம், அக்.8

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டாரம் வேளாண்மை உழவர் நலத்துறை அட்மா திட்டத்தின் கீழ்உழவர் திரள் பரவலாக்கம் பெருவிழா நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் அற்புத வேலன் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் மோகன சரிதா நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தபடும் திட்டங்களை எடுத்து கூறினார். சிறப்பு அழைப்பாளர் அருணா, துணை இயக்குநர் உழவர் பயிற்சி நிலையம் கலந்து கொண்டு வறட்சி வெள்ளம் புயல் பாதிப்பால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு காப்பீடு அவசியத்தையும் எடுத்து கூறினார்.

மரவள்ளி ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய முனைவர் ராஜேஸ், கலந்து கொண்டு மானாவரி நிலங்களுக்கு ஆமணக்கு பயிரிவதால் ஏற்படும் நன்மைகள் எடுத்து கூறினார். தோட்ட கலை உதவி இயக்குநர் தியாகு, வேளான்மை அலுவலர் ரவிக் குமார், கால்நடை உதவி மருத்துவர் கஸ்தூரி, வேளாண் செயற் பொறியாளர் ரமேஷ், கெங்கவல்லி வனசரக அலுவலர் அருண்குமார் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் கே.சி ரவி இளநிலை ஆய்வாளர் பட்டுவளர்சி துறை பிரியதர்சினி உதவி வேளாண்மை அலுவலர் விற்பனை வணிகம் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங்களை எடுத்து கூறினார்கள். தனியார் விதை, பூச்சி மருந்து, சொட்டுநீர் பாசன நிறுவனங்கள் பொருட்டுகள் கருத்து காட்சிக்கு வைக்கப்பட்டது .

இதில் 150 விவசாயிகள் கலந்து கொண்டனர். நிகழ்சிக்கான ஏற்பாட்டினை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கர் பிரபா ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# விதை நெல்லுக்கு அரசு மானியம் வேளாண் உதவி இயக்குநர் தகவல்

திருவள்ளூர், அக்.8

சம்பா பருவத்தில் நெல்பயிரிடும் விவசாயிகள், வேளாண் விரிவாக்க மையங்களில், மானிய விலையில் விதை நெல் பெறலாம், என, வேளாண் உதவி இயக்குநர் ந.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் ஒன்றியத்தில், 50 ஊராட்சிகளில் பெரும்பாலானோர் விவசாயத்தையே நம்பியே வாழ்கின்றனர். இதில் அதிகளவில் விவசாயிகள் நெல், கரும்பு, காய்கறி, பூ மற்றும் சவுக்கு போன்ற பயிர்கள் செய்து வருகின்றனர். தற்போது, சம்பா பருவத்தில், விவசாயிகள் நெல் பயிரிடுவதற்கு தயாராகி வருகின்றனர். குண்டுரக நெல் பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது, சம்பா பருவத்திற்கு, திருவள்ளூர் மற்றும் கிளாம்பாக்கம் வேளாண் விரிவாக்க மையங்களில், விவசாயிகள் நிலத்தின் சிட்டா, ஆதார் கார்டு காண்பித்து, மானிய விலையில் விதை நெல் பெறலாம் என, வேளாண் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது குறித்து, திருவள்ளூர் வேளாண் பொறுப்பு உதவி இயக்குநர் ந.தெய்வேந்திரன் கூறியதாவது, மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், சம்பா பருவத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு, மானிய விலையில் விதை நெல் வழங்கப்படுகிறது.

அதாவது, டி.கே.எம்., – 13, ஏ.டி.டி 54, கோ 51 மற்றும் ஏ.டி.டி 59 ஆகிய விதை நெல்லுக்கு, கிலோ 20 ரூபாய் மானியம் வழங்கப்படும். மேலும், பயிருக்கு தேவையான உயிர் உரங் களும் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே, விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி, மானியத் துடன் விதை நெல் பெற்றுக் கொள்ள வேண்டும். தற்போது, டி.கே.எம். – 13 – 17700 கிலோ, ஏ.டி.டி 54 – 2000 கிலோ, கோ 51 – 600 கிலோ, ஏ.டி.டி 59 – 10700 கிலோ விதை நெல் இருப்புள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆத்மா திட்டத்தின் மூலம் மண்வள மேலாண்மை பற்றிய ஒரு நாள் பயிற்சி




விழுப்புரம், அக்.8

விழுப்புரம் மாவட்டம், மயிலம் வட்டாரம், ரெட்டனை கிராமத்தில் வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்டத்தின் சார்பில் விவசாயிகளுக்கான மண்வளம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை பயிற்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) ஜாய்சின் சமிதா தலைமை வகித்து, மண்வளத்தை பாது காப்பதன் அவசியம் குறித்து பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் வாழ்வரசி வரவேற்றார்.

விழுப்புரம் மண் பரிசோதனை வேளாண்மை அலுவலர் கிருத்திகா, மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான உரங்களை சரியான அளவில் பயன்படுத்துவது குறித்து செயல்விளக்கத்துடன் எடுத் துரைத்தார். பேரூட்டச்சத்து, நுண்ணூட்டச்சத்து ஆகிய வற்றின் பங்கு மற்றும் பயிர் வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார்.

மேலும், மண்ணின் வளத்தை தொடர்ந்து பாதுகாக்க தொழு உரம், பசுந்தாள் உரம், இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும். மண் பரிசோதனை செய்யாமல் தேவைக்கு அதிகமாக இரசாயன உரங்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறையை பின்பற்றுவதன் மூலம் உரச் செலவை குறைத்து, மண் வளத்தையும் பயிர் மகசூலையும் மேம்படுத்த முடியும் என அறிவுறுத்தப்பட்டது.

உதவி வேளாண்மை அலுவலர் சுதா, வேளாண்மைத் துறையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து

விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். சிறு, குறு விவசாயிகள் அரசு மானியத்தை பயன்படுத்தி சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன வசதிகளை அமைத்து பயன்பெறுமாறும் கேட்டுக் கொண்டார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் தேவதாஸ், கௌசல்யா ஆகியோர் செய்திருந் தனர்.

இதில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாட்டில் ட்ரோன் தொழில்நுட்பம் நடைமுறையில் உள்ள மற்றும் சமீபத்திய திட்டங்கள்

ட்ரோன் அல்லது ஆளில்லா வான்வழி வாகனம் (Unmanned Aerial Vehicle – UAV) என்பது மனிதர் நேரடியாக இயக்காமல் தொலைநிலை அல்லது தானியங்கி முறையில் செயல்படும் நவீன தொழில்நுட்பமாகும். இத்தொழில்நுட்பம் தற்போது வேளாண்மை, பேரிடர் மேலாண்மை, நில அளவை, சுற்றுச் சூழல் கண்காணிப்பு, உள்கட்டமைப்பு ஆய்வு, பாதுகாப்பு மற்றும் தொழில்துறை போன்ற பல துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் வேளாண்மையில் பூச்சிக்கொல்லி மற்றும் திரவ உரத் தெளிப்பு, பயிர் கண்காணிப்பு மற்றும் துல்லிய வேளாண்மை போன்ற பயன்பாடுகளில் ட்ரோன்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

**1. வேளாண் இயந்திரமயமாக்கலுக்கான துணை இயக்கம் SMAM**



மத்திய அரசின் Sub-Mission on Agricultural Mechanization (SMAM) திட்டம் வேளாண் இயந்திரமயமாக்கலுடன் ட்ரோன் தொழில்நுட்பத்தையும் ஊக்குவிக்கும் முக்கியத் திட்டமாகும். 2026 ஆம் ஆண்டு ஜூலை மாத மத்திய அரசு வெளியிட்ட தகவலின்படி, ICAR நிறுவனங்கள், KVK, State Agricultural Universities மற்றும் வேளாண் துறைகள் போன்ற தகுதியான நிறுவனங்களுக்கு ட்ரோன் கொள்முதல் மற்றும் செயல் விளக்கங்களுக்காக ட்ரோன் ஒன்றின் விலையில் 100% வரை (அதிகபட்சம் ரூ.10 லட்சம்) நிதியுதவி வழங்கப்படுகிறது. FPO-க் களுக்கு ட்ரோன் செயல்விளக்கத்திற்காக 75% வரை மானியம் வழங்கப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்கு வாடகை அடிப்படையில் ட்ரோன் சேவைகளை வழங்கும் Custom Hiring Centres, FPO-க்கள் மற்றும் கிராமப்புற தொழில் முனை வோருக்கும் திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படுகிறது. இதன் நோக்கம் சிறு மற்றும் குறு விவசாயிகளும் அதிக முதலீடு செய்யாமல் ட்ரோன் சேவையைப் பயன்படுத்துவதாகும்.

**2. ட்ரோன் மூலம் துல்லிய வேளாண்மை**

வேளாண்மையில் ட்ரோன்களின் முக்கியப் பயன்பாடு துல்லிய வேளாண்மை ஆகும். ட்ரோன்கள் மூலம் வயல்களின் நிலை, பயிர்களின் வளர்ச்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், நீர் பற்றாக்குறை போன்றவற்றைக் கண்காணிக்க முடியும். தேவையான பகுதிகளில் மட்டும் பூச்சிக்கொல்லி அல்லது திரவ உரத்தைத் தெளிப்பதால் உள்ளீட்டுச் செலவையும் நேரத்தையும் குறைக்க முடியும். SMAM திட்டத்தின் கீழ் ட்ரோன் செயல் விளக்கங்கள் நாடு முழுவதும் பெரிய அளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 2026 ஜூலை மாத அரசுத் தகவலின்படி, 40,928 ட்ரோன் செயல்விளக்கங்கள் சுமார் 40,918 ஹெக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3. பெண்களுக்கான Namo Drone Didi திட்டம்**

Namo Drone Didi என்பது பெண்கள் சுயஉதவிக் குழுக்களை (SHGs) ட்ரோன் சேவை வழங்குநர்களாக உருவாக்கும் மத்திய அரசின் முக்கியமான திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் பெண் களுக்கு நவீன தொழில்நுட்பப் பயிற்சியுடன் புதிய வருமான வாய்ப்பும் உருவாக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 2023-24 முதல் 2025-26 வரையிலான காலத்திற்கு ரூ.1,261 கோடி ஒதுக்கப்பட்டது. பெண்கள் SHG-க்களுக்கு ட்ரோன் வழங்கு வதோடு ட்ரோன் இயக்குவதற்கான பயிற்சியும் வழங்கப் படுகிறது. 2026 பிப்ரவரி மாத மத்திய அரசு தகவலின்படி, தமிழ்நாட்டில் 44 பெண்கள் SHG உறுப்பினர்கள் ட்ரோன் பைலட் பயிற்சி பெற்றுள்ளனர், திட்டத்தின் கீழ் தொடர்புடைய ட்ரோன் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர் என மாநில வாரியான தரவு தெரிவிக்கிறது. இத்திட்டத்தின் முக்கியத்துவம், பெண்களை வெறும் தொழில்நுட்பப் பயனாளிகளாக அல்லாமல் ட்ரோன் சேவை தொழில்முனைவோர்களாக உருவாக்குவதிலேயே உள்ளது.

**4. TNAU மற்றும் ட்ரோன் பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) வேளாண்மையில் ட்ரோன் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது. ட்ரோன் இயக்கம் மற்றும் வேளாண் பயன்பாடுகளுக்கான பயிற்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ட்ரோன் தொழில்நுட்பத்தில் திறன் பெற்ற இளைஞர்கள் எதிர்

காலத்தில் Drone Pilot, Drone Service Provider, Precision Agriculture Technician, GIS/Remote Sensing Technician போன்ற பணிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

### 5. TANII – அரசு நிர்வாகத்தில் UAV பயன்பாடு

தமிழ்நாடு அரசின் Tamil Nadu Innovation Initiatives (TANII) முயற்சியின் ஆதரவுடன் அண்ணா பல்கலைக்கழகத்தின் MIT வளாகத்தில் UAV Unit உருவாக்கப்பட்டது. இது 2015–16 காலகட்டத்தில் தொடங்கப்பட்டதாக தமிழ்நாடு அரசின் TANII தளம் குறிப்பிடுகிறது. இந்த UAV அமைப்பு பேரிடர் மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு, வேளாண் கண்காணிப்பு, உள்கட்டமைப்பு ஆய்வு மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு போன்ற பல்வேறு துறைகளில் ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்துகிறது. இதன் மூலம் வெள்ளம், புயல், நிலச்சரிவு போன்ற பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை விரைவாக கண்காணிப்பது மற்றும் சேத மதிப்பீடு செய்வது போன்ற பணிகளை மேற்கொள்ள முடியும்.

### 6. தமிழ்நாடு DeepTech Startup Policy 2025–26

ட்ரோன் என்பது Robotics, Artificial Intelligence, Computer Vision, Remote Sensing மற்றும் Autonomous Systems போன்ற பல DeepTech துறைகளுடன் தொடர்புடையது. இதனால் தமிழ்நாட்டின் DeepTech Startup Policy 2025–26 ட்ரோன் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய நிறுவனங்களுக்கு முக்கியமான வாய்ப்புகளை வழங்குகிறது. 2026 ஜனவரி 8 அன்று வெளியிடப் பட்ட இந்தக் கொள்கையின் கீழ் 100 DeepTech startups-க்கு ஆதரவு, ரூ.100 கோடி அளவிலான முதலீட்டைத் திரட்டுதல், 10,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு DeepTech திறன் பயிற்சி வழங்குதல், test beds \u®D Government as Early Adopter போன்ற முயற்சிகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும் iTNT Hub-[ Hardware Design & Venture Studio திட்டத்தில் “Robotics, Drones & Autonomous Systems” என்பது முக்கிய கவனம் செலுத்தப்படும் துறையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டுரை ஆசிரியர் : *Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@ gmail.com*



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பருத்தி விவசாயத்தை போற்றுவோம்! பருத்தி விவசாயிகளின் உழைப்பை போற்றுவோம்!!



உலக அளவில் பருத்தியின் (COTTON) முக்கியத்துவத்தையும், பருத்தி சாகுபடியில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் பங்களிப்பை எடுத்துரைக்கும் நாளாக ஆண்டு தோறும் அக்டோபர் 7ந்தேதி (நேற்று முன்தினம்) உலக முழுவதும் 'உலக பருத்தி தினம்' அனுசரிக்கப்பட்டது நாம் அறிந்ததே.

**உலக பருத்தி தினம் எப்போது?**

பெனின், புர்கினா, பாசோ காட் மற்றும் மாலி ஆகிய 4ஆப்பிரிக்கா நாடுகளின் (COTTON 4) முன்முயற்சியால், உலக வர்த்தக அமைப்பு (WTO) 2019 அக்டோபர் 7ந்தேதி முதன் முதலாக இந்த பருத்தி தினம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் ஐக்கிய நாடுகளின் பொதுசபை (UNGA) இந்த நாளை (அக்டோபர் 7) உலக பருத்தி தினமாக அதிகாரப்பூர்வமாக பிரகடனகப்படுத்தியது.

**வெள்ளை தங்கம்**

ஒரு காலத்தில் தங்கத்தின் விலையுடன் போட்டி போட்டு பருத்தியின் விலையும் இருந்தது. அதனுடைய பொருளாதார மதிப்பு காரணமாக அதை (வெள்ளை தங்கம்) என்று அழைக்கப்பட்டது. பருத்தியிலிருந்து நூல், பருத்தி விதை, கால்நடைகளுக்கு தீவனமாகவும், எண்ணெய் எடுக்கவும், பருத்தி பால் உடல் ஆரோக்கிய பானம் தயாரிக்க பயன்படுகிறது. ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் அவனை முழு மனிதனாக மாற்றிட பருத்தி பயன்படுகிறது.

**பருத்தியின் சிறப்பு?**

உலகின் (FIBRE) பயிர்களில் பருத்தி, செடியும் ஒன்று. பருத்தியின் பஞ்சிலிருந்து இயற்கை நூல் தயாரிக்கப்பட்டு,

ஆடை முதல் படுக்கை விரிப்பு, வேட்டி, துண்டு உள்ளிட்ட பல்வேறு வகையான ஜவுளி பொருட்கள் தயாரிக்க பருத்தி பெரிதும் பயன்படுகிறது. இதன் மூலமாக விவசாயம் முதல் நூற்பாலை வரை, நெசவு ஆடை, உற்பத்தி மற்றும் வணிகம் வரை பருத்தியின் பயன்பாடு உள்ளது.

**இந்தியாவில் பருத்தியின் நிலைபாடு?**

உலகின் முக்கிய பருத்தி பயிரிடப்படும் நாடாக இந்தியா உள்ளது. பருத்தி சாகுபடிகேற்ற மண்வளமும் தட்ப வெப்ப நிலையும் கொண்ட நாடு இந்தியா. அதனால் இந்தியாவின் தென் மாநிலங்களான மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, ஆந்திரா, ம.பி., தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் முக்கிய பணப்பயிராக பருத்தி பயிரிடப்படுகிறது. விதைப்பு முதல் அறுவடை வரையில் பருத்தி சாகுபடியில் பல்வேறு வகையான பிரச்சனைகள் சவால்கள் உள்ளன. மண் வளம், பூச்சி நோய் தாக்குதல், உரச்செலவு, சந்தை விலை நிலவரம் உள்ளிட்டவைகள் பருத்தி சாகுபடியாளர்கள் சந்திக்க வேண்டியதாக உள்ளது.

**பருத்தி சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள்**

பருத்தியில் தரமான சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும். மழைநீ ர் சேமிப்பு, சொட்டுநீர் பாசன உள்ளிட்ட நவீன நீர் மேலாண்மை முறைகளை கடைபிடிக்க வேண்டும். மேலும் மண் வளத்தை பாதுகாத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த சாகுபடி முறைகளை கையாள வேண்டும். விவசாயிகளின் உழைப்பு பருத்தி உற்பத்தி செய்வதுடன் நின்று விடுகிறது. ஆடை வரை நீண்ட உற்பத்தி சங்கிலியின் (தொடக்க புள்ளியாக) விவசாயி உள்ளார் என்பதை மறந்து விடக்கூடாது. பருத்தி சாகுபடியில் சைமா போன்ற தனியார் அமைப்புகளும், பருத்தி ஆராய்ச்சி மையங்களும் தொடர்ந்து ஆராய்ச்சிகளையும் புதுப்புது தொழில் நுட்பங்களை கண்டறிந்து வருகின்றனர்.

அக்டோபர் 7ஆம் நாள் பருத்தியில் ஈடுபட்ட நாடுகள் எதிர் கொள்ளும் சவால்கள், குறு சிறு விவசாயிகளின் வாழ்வாதாரம் பருத்தி சார்ந்த தொழில்களின் முக்கியத்துவம் மற்றும் சர்வதேச பருத்தி வணிகம் குறித்து உலக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்திடவே இந்த நாளின் முக்கிய நோக்கமாகும்.

பருத்தி வளம் பெறட்டும்! பருத்தி விவசாயிகளின் வாழ்வாதாரம் சிறக்கட்டும்!! என விவசாயிகளின் உழைப்பை போற்றுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# இயற்கை விவசாயம் பற்றிய வெளிவளாக பயிற்சி



கடலூர், அக்.8

கடலூர் மாவட்டம், வேளாண்மை துறை மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் சார்பாக 07.10.26 அன்று காட்டு மன்னார்கோவில் வட்டாரம், கீழ்ராதாம்பூர் கிராமத்தில், இயற்கை விவசாயம் பற்றிய வெளிவளாக பயிற்சி நடைப்பெற்றது. இப்பயிற்சியை கடலூர் மாவட்டம், வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) மலர்வணன், துவக்கி வைத்து, இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். வேளாண்மை துறை இணை இயக்குநர் (மத்திய திட்டம்) அமிர்தராஜ், கலந்துக் கொண்டு இயற்கை விவசாய சான்றளிப்பு நடைமுறைகள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். கடலூர் வேளாண்மை அறிவியல் நிலைய தலைமை விஞ்ஞானி முனைவர் க.நடராஜன், விஞ்ஞானி முனைவர் கோ.சத்திய நாராயணன், கலந்துக் கொண்டு இயற்கை விவசாயத்திற்கு தேவையான இடுப்பொருட்கள் தயாரிப்பு முறைகள், கையாள வேண்டிய ஆவணங்கள் பற்றி எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் வேளாண்மை துறை சார்ந்த கதிர்காமன், செல்வராஜ், கொளஞ்சிநாதன், தண்டபானி, சந்தான கிருஷ்ணன் ஆகியோர், இப்பயிற்சியில் கலந்துக் கொண்டனர். இப்பயிற்சியில் இயற்கை விவசாயிகள் ஜெயபால், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் தங்களது இயற்கை விவசாய அனுபவத்தை எடுத்துரைத்தார். இறுதியாக காட்டுமன்னார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) உமாதேவி, நன்றியுரை வழங்கினார். இப்பயிற்சியில் கீழ்ராதாம்பூர் கிராமத்தை சேர்ந்த 70க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

# உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், இடுபொருள் தயாரிப்பு மற்றும் விற்பனை நிலையம் குறித்த தகவல்களை சேகரித்தல் பணியில் வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாகப்பட்டினம், அக்.8

நாகப்பட்டினம், கீழ்வேளூரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சியின் நிலையத்தில் பயிலும் மாணவிகளால் கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டமானது நீடாமங்கலம்






ஒன்றியத்தின் மேற்கொள்ளப்பட்டது. இதில் நகர், சித்தமல்லி, வடுவூர் தென்பாதி, பெரியகோட்டை ஆகிய கிராமங்களில் சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகள் குறித்த தகவல்களையும் அவர்களது விவசாயம் தொடர்பான சிக்கல்களையும் கேட்டறிந்தனர். மேலும் இயற்கை விவசாயிகள் குழு இணைந்து நடத்தும் இடுபொருள்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை நிலையத்தின் செயல்பாடுகளை குறித்த விளக்கங்களை விவசாயிகள் மூலமாக கேட்டறிந்தனர். இங்கு மீன் அமிலம், குருபஞ்சகவியம், பூச்சி விரட்டி ஆகியவை தயாரிக்கப் படுகின்றன. இக்குழுவிடமிருந்து இடுபொருள் மாதிரிகளை கல்லூரி மாணவிகள் பெற்றுக் கொண்டனர்.

மேலும், இக்குழுவானது இயற்கையான விவசாயம் மூலமாக தயாரிக்கும் காய்கறிகளை வார சந்தைகளில் அமைக்கும் திட்டத்தையும் மேற்கொள்ளும் செய்தியை விவசாயி செழியன் எடுத்துரைத்தார். நீடாமங்கலம் மற்றும் வடுவூர் பகுதியில் செயல்படும் முதன்மையான உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (FPO) Delta vaduvur Agriculturist Welfare Farmer Producer Company Limited உள்ளூர் விவசாயிகளின் விளை பொருட்களை திரட்டி மதிப்பு கூட்டி நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து தருகிறது.

இந்த நிறுவனம் மத்திய அரசின் பத்தாயிரம் FPO-க்கள் உருவாக்கும் திட்டத்தின் கீழ் மற்றும் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண்மை வணிக கூட்டமைப்பு (TNSFAC) மூலம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இத்தகவல் இந்நிறுவனத்தின் முக்கிய பிரதிநிதியான வி.ஆர்.கோபாலகிருஷ்ணன் மூலமாக திரட்டப்பட்டது. இப்பகுதியில் விளையக்கூடிய முக்கிய பயிர்களான நெல், நிலக்கடலை, எள் மற்றும் சிறுதானியங்களை விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்கிறது. இந்நிறுவனத்தில் சுமார் 20 கிராமங்கள் நீடாமங்கலம் ஒன்றியத்தில் இருந்து இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மதிப்பு கூட்டப்பட்ட விளை பொருட்களை நேரடியாக விற்காமல் அவற்றை மதிப்பு கூட்டி நுகர்வோரிடம் கொண்டு சேர்க்கிறது.

# இயற்கை விவசாயம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.8

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-27 ஆம் ஆண்டு பாப்பனோடை கிராமத்தில் இயற்கை விவசாயம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி திருப்பரங் குன்றம் வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பயன்படுத்தும் ஒரு நிலையான வேளாண்மை நடைமுறையாகும் என்பதை விளக்கி கூறினார். தென் மாவட்டங்களில் இயற்கை விவசாயம் மற்றும் முன்னோடி விவசாயி அன்ன வயல் காளிமுத்து இயற்கைஉரமண் வளத்தை அதிகரித்து பயிர் உற்பத்தியை மேம்படுத்த உதவுகிறது. இயற்கை வேளாண்மையின் முக்கிய நோக்கம் நீண்டகால மண் ஆரோக்கியத்தை பாதுகாத்து சமநிலை தாவர ஊட்டச்சத்தை வழங்குவதுடன் சுற்றுச்சூழல் வளத்தை அதிகரிப்பதாகும். இது நவீன வேளாண்மை இயற்கை விவசாயம் மற்றும் நிலையான பயிர் உற்பத்தி முறைகளில் அதிக மகசூலும் வளங்களின் திறமையான பயன்பாட்டையும் அடைய பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த இயற்கை விவசாயம் மேலாண்மையின் அடிப்படை கோட்பாடு பண்ணைச் சானம் வெர்மி கம்போஸ்ட் பச்சை உரம் பயிர் மீதமுள்ள கழிவுகள் உயிர் உரங்கள் பஞ்சகாவியா, மீன் அமிலம் போன்ற பல்வேறு ஊட்டசத்து மூலங்களை சரியான முறையிலும் மற்றும் ஒருங்கிணைந்த பயன்படுத்துவதாகும் செயல் விளக்கத்துடன் கூறினார். மதுரை மாவட்ட ஈா ஒருங்கிணைப்பாளர் அருண்குமார் தற்காலச் சூழலில் இயற்கை விவசாயம் மிகவும் அவசியம் என்பதை உணவு முறைகளுடன் எப்படி ஒன்றி போக வேண்டும் என்பதையும் எடுத்து கூறினார். ஒருங்கிணைந்த அணுகு முறை நைட்ரஜன் பாஸ்பரஸ் பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் ஆகியவற்றை பயிர்களின் தேவைக்கேற்ப சரியான அளவிலும் சரியான நேரத்திலும் வழங்குகிறது என்பன குறித்து பயிற்சி அளித்தார். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி

விஜய பாரதி நடைமுறைகள் மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்து கின்றன மண் உயிர்சத்து கார்பனை அதிகரிக்கின்றன. நுண்ணுயிர் செயல்பாட்டை ஊக்குவிக்கின்றன மற்றும் ஊட்டச்சத்து சுழற்சியை மேம்படுத்துகின்றன இயற்கை உள்ளீடுகள் மண் ஆரோக் கியத்தையும் நீர் தாங்கும் திறனையும் உயர்த்துகின்றன. அதே நேரத்தில் ரசாயன உரங்கள் உடனடி ஊட்டச்சத்து கிடைப்பை வழங்குகின்றன. உயிர் உரங்கள் ஊட்டச்சத்துக்களின் கரையக்கூடிய தன்மையையும் உயிரியல் நைட்ரஜன் நிலை நிறுத்தத்தையும் அதிகரிக்கின்றன என்றும் எடுத்துக் கூறினார்.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை அதிக அளவில் ரசாயன உரங்களின் மீது சார்ந்து இருப்பதை குறைக்க உதவுகிறது. இதனால் உற்பத்திச் செலவுகள் குறைகின்றன மற்றும் மண் உப்பு சேர்த்தல் ஊட்டச்சத்து மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு போன்ற அபாயங்கள் தடுக்கப்படுகின்றன.

இது பயிர்களின் கருத்தை மேம்படுத்தி அழுத்த நிலைகளை தாங்கும் உயர்த்தி சுற்றுச்சூழல் சமநிலையை பேணும் வகையில் நிலையான வேளாண்மை ஆதரிக்கின்றது நிலையான வேளாண்மை மண்ணை ஆரோக்கியத்தை மேலாண்மை பயிர் உற்பத்தி மீது அதிகரித்து வரும் கவனத்தின் காரணமாக ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை வேளாண்மை முறைகளின் முக்கியமாக உருவெடுத்துள்ளது.

இதன் முழுமையான அணுகுமுறை நீண்டகால மண்வளம் மேம்பட்ட பயிர் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை உறுதி செய்கின்றது இதனால் சமநிலை மற்றும் பொறுப்பான வேளாண்மை நடை முறைகளின் அவசியமாகிறது. சமச்சீரான உரப்பயன் பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்தும் செயல் விளக்கத்துடன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

பாப்பனோட கிராமம் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இம் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சிக்கு விவசாயிகள் மற்றும் செயல் விளக்கம் அமைப்பினை தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி செய்திருந்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா முகவுரை மற்றும் நன்றியுரை வழங்கினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# கிராம நிர்வாக அலுவலரை (VAO) நேரில் சந்தித்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள்



நாகப்பட்டினம், அக்.8

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் இயங்கி வரும் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவர்கள் நன்னிலம் வட்டாரத்தில் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், கிராம நிர்வாக அலுவலரை (VAO) நேரில் சந்திக்கப்பட்டு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சந்திப்பின் போது, கிராமத்தின் மக்கள் தொகை, விவசாய நிலங்களின் பரப்பளவு, முக்கியமாக சாகுபடி செய்யப்படும் பயிர்கள், பாசன வசதிகள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார நிலை உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் பெறப்பட்டன. மேலும், கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசு நலத்திட்டங்கள், வேளாண்மை சார்ந்த திட்டங்கள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் அரசு சேவைகள் குறித்த விவரங்களும் கேட்டறியப்பட்டன. கிராமத்தின் வேளாண் நிலவரம், நிர்வாக நடைமுறைகள் மற்றும் விவசாயிகளால் எதிர்கொள்ளப்படும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த தகவல்கள் கிராம நிர்வாக அலுவலர் மூலம் மாணவர் களுக்கு வழங்கப்பட்டன.

# ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் சமச்சீர் உரப்பயன்பாடு குறித்த பயிற்சி

மதுரை, அக்.8

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரம், ரிசபம் கிராமத்தில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் சமச்சீர் உரப்பயன்பாடு குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி, தலைமை தாங்கினார். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை பற்றியும் பிரதம மந்திரி கௌரவ நிதி திட்டம் பற்றி விளக்கினார். வேளாண்மை அலுவலர் டார்வின் அவர்கள் கூறுகையில் வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய திட்டங்களில் பற்றி எடுத்து விளக்கினார்.

திட்டங்கள் மற்றும் மானிய திட்டங்களில் பற்றி எடுத்து விளக்கினார். மேலும் வேளாண்மை அறிவியல் நிலையம் பேரசிரியர் சுப்பிரமணியன் கலந்து கொண்டு சமச்சீர் உரப்பயன்பாட்டின் முக்கியதுவம் பற்றியும் பசுந்தாள் இலைகளை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் மேலும் மண்மாதிரி எடுத்தல் அதன் பயன்பாடுகள் மற்றும் பயிருக்கு ஏற்ற உரமிடுதல் பற்றி விளக்கினார்கள்.

உதவி வேளாண்மை அலுவலர் சரவணக்குமார் கூறுகையில் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் மற்றும் உயிர் உரங்கள் இருப்புமற்றும் பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரியா நன்றி கூறினார். மேலும் இப்பயிற்சிகான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் பூமிநாதன், அருணா தேவி சிறந்த முறையில் செய்திருந்தனர்.

# இயற்கை வேளாண்மை விதைத் திருவிழா 2026

திருப்பூர், அக்.8

இயற்கை வேளாண்மையை அறிந்து கொள்ளவும், பாரம்பரிய விதைகளை பாதுகாக்கவும், இயற்கை விவசாயிகளுடன் நேரடியாக உரையாடவும் ஒரு சிறப்பான வாய்ப்பு!

**விழாவில் :** நாட்டு விதைகள் கண்காட்சி மற்றும் விற்பனை, இயற்கை வேளாண் விளைபொருட்கள் விற்பனை அரங்குகள், பாரம்பரிய விதைகள் மற்றும் நாட்டு ரகங்கள் அறிமுகம், இயற்கை விவசாயிகளை நேரில் சந்தித்து உரையாடும் வாய்ப்பு, பல இயற்கை விவசாயிகளை சந்தித்து அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு, விவசாய முறைகள் மற்றும் பாரம்பரிய வேளாண் அறிவைப் பற்றி அறிந்து கொள்ளலாம். இயற்கை முறையில் விளைந்த பொருட்களை நேரடியாக வாங்கலாம், குழந்தை களுக்கான கலை மற்றும் படைப்பாற்றல் போட்டிகள், குழந்தை களுக்கான போட்டிகள், ஓவியப் போட்டி, களிமண் கலைப் போட்டி, கவிதைப் போட்டி, பாட்டுப் போட்டி, நாட்டுப்புறப் பாடல்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

11 அக்டோபர் 2026 – ஞாயிற்றுக்கிழமை, காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, P.A. பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, பொள்ளாச்சி. **அனுமதி இலவசம்!**

வாருங்கள், நாட்டு விதைகளை அறிந்து, இயற்கை விவசாயிகளை சந்தித்து, இயற்கையுடன் இணைந்து இனிய எதிர்காலத்தை உருவாக்குவோம்!

# இப்கோ உரச் சீர்திருத்த விழிப்புணர்வு விழா

தஞ்சாவூர், அக்.8

தஞ்சாவூர் மாவட்டம், கே. சாத்தனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் உரச் சீர்திருத்த விழிப்புணர்வு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சங்கச் செயலாளர் R.கவிதா தலைமை வகித்தார். சங்கப் பணியாளர்கள் U.சிவக்குமார் மற்றும் S.குமரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் 70-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், இப்கோ கள அலுவலர் S.மாரியப்பன், வேளாண்மையில் சமச்சீர் உரப் பயன்பாட்டின் முக்கியத்துவம், உரங்களைப் பயன்படுத்தும் முறைகள்மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மேலும், பயிர் சாகுபடியில் உயிர் உரங்கள், இயற்கை உரங்கள், நானோ உரங்கள் மற்றும் உயிரி சிதைப்பான் (Bio-decomposers) ஆகியவற்றைப் பயன்படுத்துமாறு விவசாயிகளைக் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து, விவசாயிகளின் நலனுக்காகவும், மண் வளத்தை மேம்படுத்தவும், சமச்சீர் உரப் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் உரத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

பயிர்களுக்கு வழக்கமான உரங்களை அடியுரமாகவும், நானோ உரங்களை மேலுரமாகவும் பயன்படுத்துவதுடன், இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்களையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதன் மூலம் மண்வளத்தையும், பயிர் உற்பத்தித் திறனையும் மேம் படுத்த முடியும் என்று அவர் வலியுறுத்தினார்.






மேலும், வேளாண்மையில் ட்ரோன் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் மற்றும் இப்கோ உரங்களை வாங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச விபத்து காப்பீட்டுத் திட்டமான சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டத்தின் பயன்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் களப்பயிற்சி மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடல்!

நாகப்பட்டினம், அக்.8

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண்மை இளங்கலை மாணவர்கள், தங்களது கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE - Rural Agricultural Work Experience) இரண்டாம் நாள் களப்பயிற்சியை மன்னார்குடி




வட்டாரப் பகுதிகளில் வெற்றிகரமாக மேற்கொண்டனர்.



இப்பயிற்சியின் ஒரு பகுதியாக, மாணவர்கள் அசேம், தலையா மங்கலம், பரவக்கோட்டை, முதல் சேதி, அகரவேல்குடி மற்றும் மேல வாசல் ஆகிய கிராமங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

இப்பயணத்தின் போது, அப் பகுதியைச் சேர்ந்த முற்போக்கு விவசாயிகள் பிரபாகரன், சிலம்பு, ரவிவர்மன், தவமணி மற்றும் சந்தானகிருஷ்ணன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர். விவசாயிகள் தங்கள் வயல்களில் பின்பற்றி வரும் பயிர் மேலாண்மை முறைகள், பாரம்பரிய வேளாண் கருவிகளின் பயன்பாடு, இயற்கை விவசாய நுட்பங்கள் மற்றும் பாரம்பரிய உத்திகள் (ITK - Indigenous Technical Knowledge) குறித்து மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் களைக் கண்டறிந்து, அவற்றுக்கான மேலாண்மை முறைகள் குறித்தும் விவசாயிகள் மற்றும் மாணவர்கள் விரிவாகக் கலந்துரையாடினர். இதனைத் தொடர்ந்து, மாணவர்கள் விவசாயிகளுடன் இணைந்து நேரடியாக வயலில் இறங்கி நாற்று நடும் பணியிலும் (Transplanting work) தீவிரமாக ஈடுபட்டனர். கிராமப்புற விவசாயிகளின் அனுபவ அறிவையும், நவீன வேளாண்மை தொழில்நுட்பங்களையும் இணைத்துச் செயல்பட இந்த நேரடி அனுபவம் மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர்.

## விவசாயிகளிடம் பயிர் சாகுபடி முறை மற்றும் பயிர் வகைகளை கற்றறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாகப்பட்டினம், அக்.8

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் விவசாயிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பின் போது, விவசாயிகளிடம் பயிர் சாகுபடி முறைகள், பயிர் வகைகள், பயிர் சுழற்சி, பாசன ஆதாரங்கள் மற்றும் தற்போதைய சாகுபடி நிலவரம் குறித்து மாணவர்கள் கேட்டறிந்தனர்.



மேலும், விவசாயிகள் எதிர்கொள்ளும் நீர்ப் பற்றாக்குறை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல், சாகுபடி செலவு, தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் குறித்தும் மாணவர்கள் அறிந்து கொண்டனர். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் 60 நாட்கள் விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு, அவர்களின் வேளாண் நடைமுறைகள், தேவைகள் மற்றும் களத்தில் நிலவும் பிரச்சினைகளை தொடர்ந்து அறிந்து கொள்ள உள்ளனர். இதன் மூலம் விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கு வதற்கான நடைமுறை அனுபவத்தை மாணவர்கள் பெறுகின்றனர். விவசாயிகளுடன் நேரடி கலந்துரை யாடலுடன் மாணவர்களின் 60 நாட்கள் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் களப்பணி தொடங்கியது.

## வாகரை மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்குப் பயிற்சி



சேலம், அக்.8

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத் தைச் சேர்ந்த 40 முன்னோடி விவசாயிகள், 'அட்மா' (ATMA) திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகேயுள்ள வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலையத்திற்குப் பட்டறிவுப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இப்பயிற்சி முகாமினை வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தொடங்கி வைத்தார். மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையப் பேரா சிரியரும் தலைவருமான தங்க ஹேமாவதி, விவசாயிகளை வரவேற்று ஆராய்ச்சி மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு ஆராய்ச்சிச் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். தொடர்ந்து, இணைப் பேராசிரியர் துக்கையண்ணன், மக்காச் சோளப் பயிரில் நடவு முதல் அறுவடை வரை பின்பற்ற வேண்டிய சாகுபடித் தொழில்நுட்பங்கள் மற்றும் ஊடுப்பயிர்/தொடர்பயிற் சாகுபடி முறைகள் குறித்து வயல்வெளியில் செயல்முறைப் விளக்கம் அளித்தார். மேலும், மக்காச்சோளத் தாக்குதலை ஏற்படுத்தும் படைப்புழுக்களைக் கண்டறியும் முறைகள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு நேரில் காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சிக் கான அனைத்து ஏற்பாடுகளையும் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர்கள் சக்தி மற்றும் முத்துவேல் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**